# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1803/1 - 2013 මාර්තු මස 25 වැනි සඳුදා - 2013.03.25

*1803/1 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*எனது இல. : 2 /EC/GEZ/2013.*

### *தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் (143 ஆம் அத்தியாயம்)*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (143 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொருளாதாரத் தொகைமதிப்பொன்று விவாசயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் ஆகிய துறைகள் உள்ளடங்கும் வகையில் இரண்டாயிரத்துப் பதின்மூன்றாம்/பதின்நான்காம் ஆண்டுகளில் நடாத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.*

*மகிந்த ராஜபக்ஷ,*
*நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2013, பெப்புருவரி 28.*

*4 - 302*

---

*திருத்தம்*

### *இலங்கை நிலஅளவைகள் உதவியாளர்கள் சேவை பிரமாணக் குறிப்பு*

*2013, மாச்சு 06 ஆந் திகதிய 1800/22 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி பகுதி I : தொகுதி (I) - பொதுவில் மேற்குறிப்பிடப்பட்ட தலையங்கத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 6 ஆம் பக்கத்தில் பின்வருவனவற்றை சேர்த்து திருத்தி வாசிக்கப்படல் வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன் :-*

*"சிறப்பியல்பு :*

1. *அதிவிசேட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறை ஒன்று அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தி செயற்படுத்தப்படும் வரை தற்போது செயற்படும் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டில் திருப்திகரமான மட்டம் அல்லது அதற்கு கூடிய செயலாற்றுகை மட்டத்தை காண்பித்துள்ள நபர்களுக்கு அதி விசேட செயலாற்றுகையின் கீழ் எழுத்துமூல உளச்சார்பு/முறைமையான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும்.*
2. *சாதாரணமட்ட செயலாற்றுகையின் கீழ் பதவி உயர்த்துகையில் உரிய தினத்தில் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தாத உத்தியோகத்தர்களது பதவி உயர்வுத் திகதி வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தத் தாமதித்த காலப்பகுதிக்கு சமனான காலத்தால் தாமதப்படுத்தப்பட வேண்டும்."*

*எச். எம். டபிள்யூ. பிரணாந்து,*
*நிலஅளவையாளர் நாயகம்.*

*நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கொழும்பு 05,*
*2013, மாச்சு 25.*

*4 - 319*

---


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

**கவனிக்க.**- *1802/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 1802/23 ஆகும்.*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*